# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No.164/2024

Deposition of Witness of PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : மணி | Caste | : |
| Father's/Husband Name | : | Calling | : |
| Village | : | Age | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 23rd January 2025.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் எழுமாத்துார் குளவிளக்கு கிராமத்தில் குடியிருந்து கொண்டு விநாயகா பேக்கரியில் டீ மாஸ்டராக வேலை பார்த்து வருகிறேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அ.சா.2 விநாயகா பேக்கரியில் மேல்மாடியில் குடியிருந்து வருகிறார். அவரது செயினை பறித்து சென்றுவிட்டார்கள். போலீஸார்கள் அங்கு வந்திருந்தார்கள். போலீஸார் சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்தார்கள்.மேலும் வரைபடம் போட்டார்கள். நானும், பிரகாஷ் என்பவரும் அதற்காக கையெழுத்து செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் வந்து விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலீஸார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் பகல் 12.00 மணிக்கு நான் போலீஸாரை பார்த்தேன். நான் டைப் செய்த பேப்பரில் கையெழுத்து செய்தேன். என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் படித்து காண்பித்தார்கள். வெற்று தாளில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல, டைப் செய்த பேப்பரில் போட்டேன். போலீஸார் கேட்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

ஒம்/- சாட்சி : மணி

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of criminal procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK
CC.No.164/2024
Deposition of Witness of PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : தமிழ்மணி | Caste | : |
| Father's/Husband Name | : தெய்வசிகாமணி | Calling | : |
| Village | : | Age | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 23rd January 2025.
எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் அவல்பூந்துறை மீனாநகரில் சோளிபாளையத்தில் வசித்து கொண்டு மோட்டார் மெக்காளிக்காக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 மற்றும்2 ஆகியவர்களை தெரியும். அவர்கள் மீனாநகரில் உள்ள விநாயகா பேக்கரிக்கு மேல்மாடியில் வசித்து வருகிறார்கள். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் அ.சா.1 ராமமூர்த்தி வீட்டில் தங்க செயினையும் , கம்மலையும் பிடிங்கி சென்றததாக சொன்னார். நானும் சுப்பிரமணியும் சென்று பிரேமாவிடம் விசாரித்தோம். அந்த நபர்களை அக்கம் பக்கம் தேடி பார்த்து கிடைக்கவில்லை. சம்பவம் பற்றி அ.சா.1 ராமமூர்த்திக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன். போலீஸார் வந்து விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலீஸார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் பகல் 1.00 மணிக்கு நான் போலீஸாரை பார்த்தேன்.

**மறு விசாரணை இல்லை.**

ஒம்/– சாட்சி : தமிழ்மணி

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No.164/2024

Deposition of Witness of PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : சுப்பிரமணி | Caste | : |
| Father's/Husband Name | : குருசாமி | Calling | : |
| Village | : | Age | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 23rd January 2025.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் அவல்பூந்துறை சோளிபாளையத்தில் வசித்து கொண்டு பண்ணாரியம்மன் லேத் வெல்டிங் பட்டறை விநாயகா பேக்கரிக்கு எதிரே வைத்துள்ளேன். அ.சா.1 மற்றும்2 ஆகியவர்களை தெரியும். அவர்கள் விநாயகா பேக்கரிக்குமேல்மாடியில் வசித்து வருகிறார்கள். ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நான் விநாயகா பேக்கரியில் நானும், மற்றொரு நபரும் டீ சாப்பிடுவதற்காக பேக்கரிக்கு சென்றோம். அ.சா.1 வீட்டில் சத்தம் கேட்டது. நானும் மற்றொரு நபரும் அங்கு சென்றோம். அ.சா.2 பிரேமா என்னிடம் யாரோ அவரது வீட்டிற்கு வந்ததாகவும், அவரது தங்க செயினையும் பிடிங்கி சென்றததாகவும் என்னிடம் தெரிவித்தார். நானும், மற்றொரு நபரும் அக்கம் பக்கம் தேடி பார்த்தோம். இருநபர்களை பிடிக்க முடியவில்லை. சம்பவம் பற்றி நான் அ.சா.1 ராமமூர்த்திக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன். போலீஸார் வந்து விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

சத்தம் கேட்டுமேல் மாடிக்கு சென்றபோது எத்தனை மணி இருக்கும் காலை 7.00 மணியிலிருந்து 8.00 மணி இருக்கும்.

**மறு விசாரணை இல்லை.**

ஒம்/- சாட்சி : சுப்பிரமணி

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No.164/2024

Deposition of Witness of PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரேமா | Caste | : |
| Father's/Husband Name | : ராமமூர்த்தி | Calling | : |
| Village | : | Age | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 23rd January 2025.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் அவல்பூந்துறை மீனாநகர் சோளிபாளையத்தில் வசித்து வருகிறேன். சாட்சி ராமமூர்த்தி எனது கணவர் ஆவார். நாங்கள் சோளிபாளையத்தில் விநாயகா பேக்கரியில் மேல்மாடியில் குடியிருந்து வருகிறோம். எங்களுக்கு குழந்தைகள் இல்லை. எனது கணவர் புத்தக வியாபாரம் செய்து வருகிறார். நானும், எனது மனைவி மட்டும் தான் இருந்து வருகிறோம். ஆஜர் எதிரிகள் இருவரும் தான் எனது செயினை அறுத்தார்கள். கம்மல் தரவில்லை என்றால் காதை அறுத்துவிடுவோம் என மிரட்டினார்கள். 02.02.2024 ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு மேல்மாடியில் நான் இருந்தபோது ஆஜர் எதிரிகள் இருவரும் உள்ளே வந்து என்னிடம் கிருஷ்ணர் புத்தகம் வேண்டும் என கேட்டார்கள். பின்னர் நான் புத்தகம் எடுக்க சென்றேன். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் செயினை கழற்றி கொடுக்கவில்லை என்றால் கழுத்தை அறுத்துவிடுவேன் என மிரட்டினார்கள். நான் செயினை கழற்றி கொடுத்துவிட்டேன். கம்மலை கழட்டவில்லை என்றால் காதை அறுத்து விடுவேன் என மிரட்டினார்கள். நான் கம்மலையும் கழற்றி கொடுத்துவிட்டேன்.

2. தங்க செயின் 2 பவுன் எடை கொண்டது. கம்மல் 1/4 பவுன் எடைகொண்டது. சம்பவ இடத்தில் இருந்து எதிரிகள் சென்றுவிட்டார்கள். எனது கணவர் வீட்டிற்கு வந்த பிறகு சம்பவம் பற்றி தெரிவித்தேன். எனது கணவர் தான் காவல்நிலையத்தில் புகார் செய்தார். போலீஸார் சம்பவ இடம் வந்து பார்த்து விசாரித்தார்கள். போலீஸார் ஆஜர் எதிரிகள் இருவரையும் எனது வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். போலீஸார் திருடு போன எனது தங்க செயினை காண்பித்தார்கள் அதை நான் அடையாளம் காண்பித்தேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

இந்த வழக்கு சம்பந்தமான போலீஸார் என்னை ஒருமுறை தான் விசாரித்தார்கள் என்றால்ச ரிதான். போலீஸார் விசாரித்த போது செயின் என்ன மாடல் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். செயினை எப்போது செய்தேன் என்றால் காணாமல் போனதற்கு 2 வருடங்கள் முன்பு செயின் செய்தேன். அவல்பூந்துறையில் காணாமல் போன செயினை செய்தேன் என்றால் சரிதான். போலீஸார் நடந்த விபரங்களை எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். நான் தாலி, மாங்கல்யம், உரு ஆகியவற்றை அன்றைய தினத்தில் செயினுடன் நான் போடவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் ஏன் போடவில்லை என்றால் பயத்தினால் நான் கழற்றி வைத்துவிட்டேன்.

2, காணாமல் போன செயினின் மாடல் எப்படிஇருக்கும் என்றால் கோதுமை மாடல் மற்றும் கொக்கி மாடல் செயின். எனது கணவர் செயின் காணாமல் போன தினத்தன்று எத்தனை மணிக்கு வந்தார் என்றால் காலை 10.30 மணிக்கு வந்தார். காவல்நிலையத்தில் புகார் கொடுத்த மறுநாளே போலீஸார் 2 நபர்களை எனது வீட்டிற்கு அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது சொந்த ஊர் பூந்துறை என்றால் சரிதான். செயின் காணவில்லை என்று சொல்வதும், எதிரிகள் எனது வீட்டிற்கு வந்ததாக சொல்வதும், எதிரிகள் செயினை கழற்றி கொடுக்காவிட்டால் கழுத்தை அறுத்துவிடுவேன் என மிரட்டியதும், கம்மலை கழற்றி கொடுக்கவில்லை என்றால் காதை அறுத்துவிடுவேன் என மிரட்டியதாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு வந்து எதிரிகள் கிருஷ்ணர் புத்தகம் கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. செயின் காணாமல் போனவுடன் எனது வீட்டில் கூட்டம் வந்தது என்றால் கூட்டம் எதுவும் வரவில்லை, போலீஸார் தான் வந்தார்கள்.

3. போலீஸார் எப்போது எனது வீட்டிற்கு முதன்முதலில் வந்தார்கள் என்றால் 02.03.2024 ஆகும். 02.03.2024 அன்று எத்தனை போலீஸார் வந்தார்கள் என்றால் 2,3 நபர்கள் வந்தார்கள். முதன்முதலில் போலீஸார் வந்தபோதே எனது காணாமல்போன செயினை காட்டினார்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளை இதற்கு முன்பு நான் பார்த்ததில்லை என்றாலும், இன்றுதான் முதன்முதலில் நீதிமன்றத்தில் போலீஸார் அடையாளம் காட்டினார்கள் என்றாலும் சரியல்ல. நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.பொ.1 எனக்கு பாத்தியப்பட்டதல்ல என்றாலும்

சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

ஓம்/– சாட்சி : பிரேமா

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of criminal procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK
CC.No.164/2024
Deposition of Witness of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமமூர்த்தி | Caste | : |
| Father's/Husband Name | : | Calling | : |
| Village | : | Age | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 23rd January 2025.
எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u>

நான் அவல்பூந்துறை மீனா நகர் சோளிபாளையத்தில் வசித்து கொண்டு ஆன்மீகபுத்தகம் மற்றும் சாமிபடங்களை விற்பனை செய்து வருகிறேன். சாட்சி பிரேமா எனது மனைவியாகும். நாங்கள் சோளிபாளையத்தில் பேக்கரியில் மேல்மாடியில் குடியிருந்து வருகிறோம். எங்களுக்கு குழந்தைகள் இல்லை. நானும், எனது மனைவி மட்டும் தான் இருந்து வருகிறோம். 04.01.2024ம் அன்று காலை 5.00 மணியளவில் வெளியூருக்கு வியாபாரத்திற்காக சென்றுவிட்டேன். வீட்டில் எனது மனைவி மட்டும் தான் இருந்தார். அன்று காலை 10.00சுமாரில் யாரோ 2 நபர்கள் எனது வீட்டிற்கு வந்துள்ளார்கள். எனது வீட்டிற்கு அருகில் இருந்து நபர்கள் எனக்குபோன் மூலம் தகவல் சொன்னார்கள். நான் அன்றுமதியம் 1.00 மணிக்கு எனது வீட்டிற்கு வந்தேன்.

2. நான் எனது மனைவியிடம் விசாரித்தேன். அவர் 2 நபர்கள் கிருஷ்ணா புத்தகம் வேண்டுமென்று எனது வீட்டிற்கு வந்ததாகவும், எனது மனைவி புத்தகம் எடுப்பதற்காக வீட்டிற்குள் சென்றபோது பின்னாலேயே எனது மனைவியை இடித்து தள்ளியதாகவும், எனது மனைவியின் கழுத்தில்இருந்த நகையை நீயே கழற்றி கொடுத்துவிடவேண்டும் என்றும் இல்லையென்றால் அடித்து விடுவதாகவும் சொன்னார்கள் என்று எனது மனைவி சொன்னார். அதற்கு எனது மனைவி பயந்துபோய் அவர் அணிந்திருந்த சுமார் 2 பவுன் எடையுள்ள தங்க செயினை அவரே கொடுத்துவிட்டார். மேலும் அவர் காதில் அணிந்திருந்த சுமார் 1/4 பவுன் எடை கொண்ட தோட்டை நீயே கழற்றி கொடுக்கிறாயா

இல்லை காதை அறுக்கவா என்று கேட்டதால் அவரே கழற்றி கொடுத்துவிட்டார். அக்கம் பக்கம் விசாரித்த போது அந்த இரண்டு நபர்களும் தப்பித்து சென்றுவிட்டதாக சொன்னார்கள். அரச்சலூர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். **அந்த புகார் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த நகைகளின் அப்போதைய மதிப்பு ரூ.25000 இருக்கும்.

3. 23.01.2024 அன்று அரச்சலூர் காவல்நிலைய போலீஸார் எனது வீட்டிற்கு ஒரு நபர்களை அழைத்து வந்தார்கள். அதற்கு எனது மனைவி இரண்டு நபர்கள் வந்ததாக போலீஸாரிடம் கூறினார். 02.02.2024 அன்று எனது வீட்டிற்கு மற்றொரு 2வது நபரையும் அழைத்து வந்தார்கள். 02.02.2024 அன்று நகை கிடைத்து இருப்பதாக போலீஸார் சொன்னாகள். அதன் பேரில் நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் ஏற்கனவே பெற்று சென்றிருந்தேன். தற்போது அதனை விசாரணையின் பொருட்டு ஆஜர் படுத்தியுள்ளேன். அந்த **தங்க செயின் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த தங்க செயின் புகைப்படம் எண்ணிக்கை 2 அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதனுடைய குறுந்தகடு அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

நான் கொடுத்த புகாரில் தங்க செயினின் மாடல் குறித்து கூறவில்லை என்றால சரிதான். புகாரில் நகையின் மதிப்பு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது மனைவிக்கு தாலிக்கொடியுடன் செயின் அணிவது வழக்கம் என்றால் சரிதான். அன்றைய தினம் எனது மனைவி தாலிக்கொடி அணியவில்லை என்றால் தாலியை மஞ்சள் கயிற்றில் அணிந்திருப்பார். காவல்நிலையத்தில் புகாரை நான் தான் எழுதினேன். புகாரில் கடைசி வரிக்கும் எனது கையெழுத்திற்கும் இடைவெளி உள்ளது என்றால் சரிதான். அந்த 2 நபர்களை போலீஸார் எனது வீட்டிற்கு அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். தங்க செயினை எந்த வருடம் செய்தேன் என்றால் 2016 ம் வருடம். அந்த செயினை எந்த கடையில் வாங்கினேன் என்றால் டாடா கோல்டு கடையில் வாங்கினேன்.

2. இவ்வழக்கின் சாட்சிகளான ராஜாகண்ணுசாமி மற்றும் ரகமத்துல்லா ஆகியோர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.பொ.1 தங்கசெயினில் டாடா கோல்டு முத்திரை இல்லை என்றால் சரிதான். அ.சா.பொ.1 போல் தான் எனது மனைவியின் செயின் இருக்கும் என்றால் அது என்னுடைய மனைவியின் செயின் தான். நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில்

எனது மனைவியின் காணாமல் போகவில்லை என்றால் சரியல்ல. அ.சா.பொ.1 செயின் எனக்கும், எனது மனைவிக்கும் பாத்தியப்பட்டதல்ல என்றால்ச ரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.போலீஸார் 2 நபர்களை அழைத்து வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

ஒம்/– சாட்சி : ராமமூர்த்தி

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
எழுமாத்துார் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.